மின் நிலையத்தை அமைக்க இருக்கின்றோம். ஆக, எதிர்காலத்தில் இனிமேல் பிரச்சினைகள் இருக்காது. சென்னை மாநகரைப் பொறுத்தவரை, மின்தடையே இல்லாத அளவிற்கு இந்த ஆண்டே கிட்டத்தட்ட நாங்கள் சரி செய்துவிட்டோம். இன்னும் ஆறு மாத காலத்திற்குள் முழுமையாக மின்தடை இல்லாத அளவிற்குச் செய்துவிடுவோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 194, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

194—

பேரூராட்சியாகத் தரம் உயர்த்துதல்

***5680—திருமதி மு. பரமேஸ்வரி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்ணச்சநல்லூர் தொகுதி, பிச்சாண்டார்கோவில் ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மண்ணச்சநல்லூர் தொகுதி, பிச்சாண்டார்கோவில் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.*

2018 ஜூன் 14]

திருமதி மு. பரமேஸ்வரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் இனத்தின் விடிவெள்ளியாய், பெண் இனத்தின் பெருமையாய், ஆண் ஆதிக்க சக்திகளை வீழ்த்தி, எவருக்கும் அரசியல் களத்தில் அடிபணியாத பெண் சிங்கமாய், (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்த காரியத்தில் எத்தனை இடர் வந்தாலும் நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டு, சபதத்தை நிறைவேற்றி, சரித்திரம் படைத்து, இந்திய வரலாற்றில் தனக்கென்று தனி முத்திரை பதித்து, தன் உயிர் உள்ளவரை இயக்கத்திற்கு முதல்வராய், ஆட்சியிலும் முதல்வராய், முதல்வருக்கெல்லாம் முதல்வராய் அரியணையில் இருந்து தமிழ்நாட்டை ஆண்ட பேரரசி தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)*

10 கோடி உலக தமிழினத்தின் ஒப்பற்ற தலைவியாய், தமிழ் மொழிக்காக, தமிழர்களின் உரிமைக்காக, தமிழ் இனத்திற்காக ஓய்வில்லாமல் உழைத்து, உழைத்து, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்று, எங்களையெல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு, இன்று வங்கக் கடலோரம் துயில் கொண்டு மண்ணுலகில் ஓய்வெடுக்க மனமில்லாமல், விண்ணுலகில் ஓய்வெடுத்து வழிகாட்டும் எங்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகின்றேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'எழுந்து நடந்தால் இமய மலையும் வழி கொடுக்கும்' முடங்கிக் கிடந்தால் சிலந்தி வலையும் நம்மைச் சிறை பிடிக்கும் என்ற வைர வரிகளுக்கு இலக்கணமாய், எதிரிகளின் சூழ்ச்சிகளையும், தந்திரங்களையும், முட்டுக்கட்டைகளையும் உடைத்தெறிந்து, வாயால் வீண் ஜம்பம் பேசுகின்ற ** மத்தியில், மக்கள் நலத் திட்டங்களால், செயலால் (குறுக்கீடுகள்) எதிரிகளின் முகத் திரையைக் கிழித்து (மேசையைத் தட்டும் ஒலி) தாயின் ஆட்சிக்குப் பெருமை சேர்த்துக் கொண்டு (குறுக்கீடுகள்) தனது தலைமையில் ஓராண்டு சிறப்பாய் தமிழகத்தில் ஆட்சி புரிந்துகொண்டு, (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பரமேஸ்வரி, பாராட்டியது போதும், நீங்கள் கேள்விக்கு வாருங்கள். (குறுக்கீடுகள்)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

திருமதி மு. பரமேஸ்வரி: அம்மா அவர்களின் அரசியல் வாரிசுகள் நாங்கள்தான் என நிரூபித்து, அம்மா அவர்களின் வழியில் அரசாளும் சேலத்து இரும்பாலை போன்ற எஃகு இதயமாய் (குறுக்கீடுகள்) நெஞ்சுரத்தோடு வலிமையாய், இயக்கத்தையும் ஆட்சியையும் சிறப்பாக வழிநடத்திச் செல்லும் ஆற்றல்மிகு கழக இணை ஒருங்கிணைப்பாளர் (குறுக்கீடுகள்) மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகின்றேன். (குறுக்கீடுகள்) மரியாதைக்குரிய துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகின்றேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு பக்கமும் பேசாமல் இருங்கள். (குறுக்கீடுகள்) தலைவர்களைப் பாராட்டுவது, (குறுக்கீடுகள்) தலைவர்களை பாராட்டிப் பேசுவது. . .

திருமதி மு. பரமேஸ்வரி: மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதி, பிச்சாண்டார்கோவில் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, கேள்வி நேரத்தில் அவையெல்லாம் தேவையில்லை. அந்த மாதிரி comments அடிப்பது தேவையில்லை. அவர் கூறிய ** என்ற அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) விட்டுவிடுங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920–ன் பிரிவு 3 (P)–ல், ஊராட்சியின் வருமானம், விவசாயம் சாராத தொழில்களின் வேலைவாய்ப்பு சதவிகிதம், பொருளாதார முக்கியத்துவம் மற்றும் 30,000–க்கு மிகாத மக்கள்தொகை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16–3–2007–ல் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2018 ஜூன் 14]

அந்த நெறிமுறைகளைப் பின்பற்றி, ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட வேண்டும். ஆனால், மண்ணச்சநல்லூர் தொகுதி, பிச்சாண்டார்கோவில் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்து கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.*

முற்பகல் 10—35

திருமதி மு. பரமேஸ்வரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, மண்ணச்சநல்லூர் ஒன்றியத்தில் 35 ஊராட்சிகளும், 2 பேரூராட்சிகளும் உள்ளன. அதிலும் குறிப்பாக, 2011 கணக்கெடுப்பின்படி பிச்சாண்டார்கோவில் ஊராட்சியில் மக்கள்தொகை 17,257 ஆகும். அதனுடைய பரப்பளவு 616.34.5 ஏர்ஸ் ஆகும். ஆண்டு வருமானம் 2017—2018-ல் அதாவது, 77 இலட்சத்து 500 ரூபாய். 40 சதவிகித மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆதலால், பிச்சாண்டார்கோவில் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊராட்சியின் மக்கள்தொகை 17,257 என்றும்; ஆண்டு வருமானம் ரூ.77 இலட்சம் என்றும்; விவசாயம் சார்ந்து 40 சதவிகித மக்கள் இருக்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். எல்லாம் சரி. ஊராட்சியைப் பிரிப்பது குறித்து மாவட்ட ஆட்சியரால் கூட்டம் நடத்தப்பட்டு, கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்கு கருத்துரு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்தால், அங்கிருக்கக்கூடிய சூழ்நிலையைப் பொறுத்து கண்டிப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன்*

அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் நடந்து முடிந்த உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் முடிந்தவுடன் அறிவிக்கப்பட்ட அறிவிப்பில், ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது, பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்து அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள். (குறுக்கீடு) இருங்கள், வாய்ப்புத் தருகிறேன்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஒன்றியத்தைப் பிரித்து போச்சம்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்ட ஓர் ஒன்றியமும், அதேபோல தளி ஒன்றியத்தைப் பிரித்து அஞ்சட்டியை தலைமையிடமாகக் கொண்ட ஓர் ஒன்றியமும் அமைக்கப்படுமென்று 2013 ஆம் ஆண்டு இந்தப் பேரவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், இன்று வரை அதற்கு அரசாணை பிறப்பிக்கப்படவில்லை. ஆகவே, இந்த இரண்டு ஒன்றியங்களையும் அமைத்துக் கொடுப்பதற்கான அரசாணையை பிறப்பித்து, அவற்றை அமைத்துக் கொடுப்பார்களா என மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்பொழுது அறிவிக்கப்பட்டது. வருகின்ற உள்ளாட்சித் தேர்தலின்போது நடைமுறைப்படுத்தப்பட்டு, கண்டிப்பாக அரசாணை பிறப்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன், கேள்வி கேளுங்கள்.

2018 ஜூன் 14]

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு அம்மா அவர்களின் ஆன்மாவை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் திருப்பெயர் என்னும் கிராமம் உள்ளது. 2 கிலோ மீட்டர் தூரம் வரையுள்ள தார்ச் சாலை கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக புதுப்பிக்கப்படாமல் குண்டும்குழியுமாக காணப்படுகிறது. அந்தச் சாலையின் வழியாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. 3 முறை சாலை மறியல் நடைபெற்று, கோட்டாட்சியர் மற்றும் வருவாய் வட்டாட்சியர் எல்லாம் சமாதானம் செய்து, உடனடியாகச் சாலை அமைத்துத் தருவதாக உத்தரவாதம் அளித்தார்கள். ஆனால், இன்று வரை சாலை புதுப்பிக்கப்படாமல் உள்ளது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், உடனடியாக சிறப்பு நிதி ஒதுக்கி, சாலையை அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி, மூல கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வியாக இருந்தாலும்கூட, அந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய பிரச்சினையைப் பற்றிக் கூறியிருக்கிறார். அங்கேயிருக்கக்கூடிய சாலை பழுதடைந்திருப்பதாகக் கூறியிருக்கிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்புச் சாலைகள் திட்டம் என்று பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார்கள். ஆகவே, கண்டிப்பாக, துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*

திரு. சு. புகழேந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி, மதுராந்தகம் நகரம், 50,000 மக்கள்தொகை கொண்டது. அது 24 வட்டங்களை உள்ளடக்கியது. ஓராண்டுக்கும்*

மேலாக நகராட்சி ஆணையர் அங்கேயில்லை. 6 மாதங்களுக்கு முன்பு ஒரு Commissioner வருகிறார் என்று சொன்னார்கள். காலையில் வந்தார், மாலையில் போய்விட்டார். ஓராண்டிற்கும் மேலாக மேலாளர் இல்லை; பொறியாளர் இல்லை; சுகாதார ஆய்வாளர் இல்லை; கணக்கர் இல்லை; வருவாய் ஆய்வாளர் இல்லை; எதுவுமே இல்லை. ஒரு வருடத்திற்கு முன் நகராட்சிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு basement–ஐக்கூட தாண்டவில்லை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி, நீங்கள் நல்ல பேச்சாளர். அப்படியே பேசிக்கொண்டு போக வேண்டாம். கேள்வி கேளுங்கள்.

முற்பகல் 10–40

திரு. சு. புகழேந்தி: இதெல்லாம் இருக்கின்றது என்றா சொல்ல முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. மிகவும் உள்ளே. . .

திரு. சு. புகழேந்தி: ஆணையர் இல்லை, மேலாளர் இல்லை, பொறியாளர் இல்லை, சுகாதார ஆய்வாளர் இல்லை, கணக்கர் இல்லை, வருவாய் ஆய்வாளர் இல்லை, கட்டட பணிகள் சரியாக மேற்கொள்ளப்படவில்லை, Commissioner இல்லை, Chairman இல்லை, இப்படி எதுவுமே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. இப்படியெல்லாம் நீங்கள் பேசினால், அதனை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவேன். கேள்வியோடு நிறுத்துங்கள். அதிகாரிகளை அரசு நியமிக்க வேண்டும் என்று கேளுங்கள். அவ்வளவுதான். இந்தமாதிரியெல்லாம் கேட்கக் கூடாது.

திரு. சு. புகழேந்தி: இவற்றையெல்லாம் நிறைவேற்றித் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 14]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவதுதான் கேள்வி. மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அதனை தனிக் கேள்வியாகப் போட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போது பாதி கேள்விகளுக்குமேல் மாண்புமிகு உறுப்பினர்கள் மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாமல்தான் கேட்கின்றார்கள். தஞ்சாவூரில் கேள்வி கேட்டால், வட ஆற்காட்டில் இருக்கின்றவர்கள் அடுத்த துணைக் கேள்வியை சம்பந்தம் இல்லாமல் கேட்கின்றார்கள். என்ன செய்ய முடியும்? நானும் அனுமதித்துக்கொண்டுதான் இருக்கின்றேன். வாய்ப்பு கொடுக்கவில்லையென்றாலும் வருத்தப்படுகின்றார்கள். சரி ஏதோ தொகுதி பிரச்சினையைப் பேசுகின்றார்கள் என்று அனுமதிக்கின்றேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. உங்களை மாதிரி எல்லோரும் திறமையாக படித்துக்கொண்டு வர முடியுமா? அதை எப்படி நீங்கள் அப்படி எதிர்பார்க்கின்றீர்கள்? மாண்புமிகு அமைச்சர்கள் கேள்விக்கு உண்டான பதிலைச் சொல்லத்தான் தயாராக இருப்பார்கள். அந்தமாதிரியெல்லாம் பார்த்தால் சரியாக இருக்காது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாவற்றிற்கும் தயாராகத்தான் இருப்பார்கள். இருந்தாலும் அதற்கான நேரமும் இல்லை, காலமும் இல்லை. சரி.*

வினா வரிசை எண் 195, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

195—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***4160—திரு. ப. சத்திய நாராயணன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தியாகராய நகர் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?